# மாத்ரு பஞ்சகம் -  தமிழாக்கம்
## மூலம் - ஆதி சங்கரர்

வலியும் வேதனையும் வருடும் பிரசவமே
சலிக்காது கழிவகற்றி சுத்தமாக்கும் தாயே
மெலிந்த தேகமே மெருகழிந்த மேனியே
தெளிவைத் தருவாய் தெய்வமே வணக்கம்

கனவிலே கண்டாயே கருத்தை அறிந்தாயே
மனமுடைந்து வந்தாயே மடமும் விம்மியதே
கனமான சேதியே கண்கலங்கி நின்றாயே
மனமார வேண்டுகிறேன் மாதாவே வணக்கம்

கதறும் குரலே கருணை தெய்வமே
பதறியே அழைசிவனே பரந்தாம கண்ணனே
உதவிக்கு கோவிந்தனே உடனுறைய ஹரியே
அதரம் அழைக்குமே அகிலத்தின் குருவை

இறக்கும் தருவாயில் இதழிலே தண்ணீரும்
சிறக்க நாமமும் சிந்தைக்கு உரைக்க
பிறந்த பயனடைய பித்ருமரியாதை செய்ய
திறனிழந்து நானும் தாமதமாய் வந்தேனே

ஆழ்ந்து நேசித்த ஆருயிர் முத்தே
ஊழ்வினை அகற்ற உகந்த இரத்தினமே
வாழ்த்தி என்னை வாழவைத்த அன்னையே
தாழ்ந்து அடிபணிந்து தருவேன் வாய்க்கரிசி